2013 அக்டோபர் 29]

இச்சங்கத்தில் நாளொன்றுக்கு 650 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அதில் 80 லிட்டர் உள்ளூர் விற்பனை போக, மீதமுள்ள 570 லிட்டர் பால், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. தற்சமயம் சங்க அலுவலகம் வாடகை இடத்திலும், சங்கக் கறவைக் கூடம் தனியாருக்குச் சொந்தமான 12 சென்ட் நிலத்திலும் செயல்பட்டு வருகின்றன. சங்கத்திற்குச் சொந்தமாக நிலம் வாங்க நிதியாதாரம் ஏதுமில்லை. ஆதலால், கீழஉப்பூரணி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கறவைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், சங்கக் கறவைக் கூடத்திற்கான நிலம் பெறுவதற்குத் தேவையான நிதியாதாரம் சங்க அளவில் ஏற்படுத்தி, கறவைக் கூடம் சட்டமன்ற உறுப்பினர் நிதி பெற்று அல்லது திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் பெற்று, இச்சங்கத்திற்குக் கறவைக் கூடம் கட்டித் தர இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதெல்லாம் கொடுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சியிலே, கண்டிப்பாக நீங்கள் அதை முன்வந்து செய்துதர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

53—

சுத்திகரிப்பு நிலையம்

***3113—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வட்டத்தில் 154 சாயத் தொழிற்சாலைகளும், 241 சலவைத் தொழிற்சாலைகளும், 186 பிரிண்டிங் தொழிற்சாலைகளும் மற்றும் 42 தோல் தொழிற்சாலைகளும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று, தனித்தனியே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்றன. எனவே, ஈரோட்டில் அரசு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் சாயத் தொழிற்சாலைகளும், தோல் தொழிற்சாலைகளும், சலவைத் தொழிற்சாலைகளும் அதிக அளவில் உள்ளன. அங்கு முக்கியத் தொழிலே ஜவுளித் தொழில்தான். ஆதலால், ஈரோட்டிற்கு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தந்தால், ஜவுளித் தொழில் சிறப்படையும். மேலும், தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு செய்யமுடியாத நிலை இருப்பதால், அதிகாரிகள் சாயப் பட்டறைகளையும், சலவைப் பட்டறைகளையும் இடித்துத் தள்ளுகிற அவல நிலை அங்கு உள்ளது. எனவே, திருப்பூரில் பொது சுத்திகரிப்பு நிலையம் உள்ளதுபோல, ஈரோட்டிலும் அமைத்துத் தர இந்த அரசு, முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வட்டத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த சாயத் தொழிற்சாலைகளும், சலவைத் தொழிற்சாலைகளும், பிரிண்டிங் தொழிற்சாலைகளும், 42 தோல் தொழிற்சாலைகளும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று, தனித்தனியே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்றன. இவற்றில் 115 சாயத் தொழிற்சாலைகளும், 33 தோல் தொழிற்சாலைகளும் உயர் நீதிமன்ற நீதிப் பேராணை எண் 5494/1998–ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின்படி, எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மற்றும் அடற்கசடு மேலாண்மை சுத்திகரிப்பு நிலையத்தை (Reject Management), நிறுவி கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலையைக் கடைப்பிடித்து வருகின்றன. அவ்வாறு பூஜ்ஜிய நிலையை, Zero liquid discharge–ஐக் கடைப்பிடிக்காமல் இருந்த சாய, தோல் தொழிற்சாலைகளை மூடுவதற்கு வாரியத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை முறையாக இயக்காமல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரினை நீர்நிலைகளிலோ, நிலத்திலோ வெளியேற்றும்பட்சத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் அமைக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவாலும் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, தவறு செய்யும் தொழிற்சாலைகள் தங்களது தவறுகளைச் சரிசெய்யும்பட்சத்தில், தொழிற்சாலைகளை மீண்டும் இயக்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், ஈரோட்டில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு அவசியம் ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.